# விசேட தேவையுடைய முஸ்லிம்கள் மீதான கரிசனை கல்ஹின்னை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**Supervisor**
*Mr. MSM. Jalaldeen,*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. MTS. Safriya,*
*Department of Arabic Language,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது 'விசேட தேவையுடைய முஸ்லிம்கள் மீதான கரிசனை கல்ஹின்னை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு' எனும் தலைப்பில் ஆய்வாக அமையப்பெறவுள்ளது. மத்திய மாகாணத்தில் அமையப் பெற்றுள்ள கண்டி மாவட்டத்தில், பூஜாப்பிட்டிய செயலகப் பிரிவிலுள்ள முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசமாக *கல்ஹின்னை காணப்படுகின்றது*.

இங்கு சுமார் 1000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில குடும்பங்களில் விசேட தேவையுடையோர் வாழ்ந்து வருகின்றனர். ஆகவே விசேட தேவையுடையோர், அவர்கள் பற்றிய இஸ்லாமிய நோக்கு, அவர்கள் மீதான கரிசனை தொடர்பிலும் இவ் ஆய்வு அமையப்பெறவுள்ளது. இவ்வகையில் இவ்வாய்வுப் பிரதேசத்தில் இத்தலைப்பில் எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கல்ஹின்னையில் விசேட தேவையுடைய முஸ்லிம்களை அடையாளப்படுத்துவதோடு அவர்கள் கவனிக்கப்படுகிறார்களா என்பதைக் கண்டறிதல், இப் பிரதேசத்தில் விசேட தேவையுடைய முஸ்லிம்கள் மீதான சமூகத்தின் பார்வையைத் தூண்டல், இப் பிரதேசத்தில் விசேட தேவையுடையோர் பற்றிய இஸ்லாமிய நோக்கை ஒன்றுதிரட்டல், அத்தோடு அவர்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற முயற்சித்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமையப்பெறவுள்ளது.

இவ்வாய்வானது அளவு ரீதியானதாகவும் பண்பு சார் முறையிலும் அமையவுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்படவுள்ளன. முதலாம் நிலைத் தரவகளாக: இக் கிராமத்தின் பிரதேச செயலாளர் பிரிவு, கிராம சேவகர் பிரிவு, பாடசாலை, பள்ளிவாசல், மத்ரஸா மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களும் இன்னும் வினாக்கொத்து, நேர்காணல்கள், அவதானிப்புகள் என்பனவும் பயன்படுத்தப்படவுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக: இவ்வாய்வுடன் தொடர்புடையதாக எழுதப்பட்ட நூற்கள், அறிக்கைகள், இணையத்தள தரவுகள் என்பன பயன்படுத்தப்படவுள்ளன.

இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வின் முதலாவது அத்தியாயம்: ஆய்வு முன் மொழிவாக அமையவுள்ளது. இரண்டாவது அத்தியாயம்: விசேட தேவையுடையோர் பற்றிய விளக்கங்களுடன், இவர்கள் தொடர்பான இஸ்லாமிய மற்றும் மருத்துவ நோக்கு தொடர்பாகவும் அமையவுள்ளது. மூன்றாவது அத்தியாயம் ஆய்வுப் பிரதேசம் தொடர்பாகவும், ஆய்வுப் பிரதேசத்தில் விசேட தேவையுடையோர் தொடர்பாகவும் அமையப்பெறவுள்ளது. நான்காவது அத்தியாயம் விசேட தேவையுடைய முஸ்லிம்கள்

மீதான கரிசனை தொடர்பாக அமையவுள்ளது. ஐந்தாவது அத்தியாயம்: ஆய்வு தொடர்பான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டு முடிவுரையை உள்ளடக்கி நிறைவு செய்யப்படவுள்ளது.

**கலைச் சொற்கள்**: விசேட தேவையுடையோர், விசேட கல்வி, மாற்றுத் திறனாளிகள், கரிசனை, கல்ஹின்னை